**கவனிக்க.**- *16.11.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1786 - 2012 නොවැම්බර් මස 23 වැනි සිකුරාදා - 2012.11.23

*1786 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III – காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கீழ் மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்ரகமுவ மாகாணம் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கீழ் மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்ரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 236 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 236 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் 2012, செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) பியசேன கமகே மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு யுன் மாதம் 23 ஆந் திகதி.

# காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின்கீழ் அறிவித்தல்கள்

எனது இல. : என்சீபீ/எச்ஜீ/எல்4/9/2426
பிரதேசச் செயலகம்,
ஹிங்குரக்கொடை,
2012.10.25.

உதவிக் காணி ஆணையாளர் (ஊடாக),
பொலன்னறுவை,

காணி ஆணையாளர் நாயகத்திற்கு,

### 1969 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சட்டத்தினாலும் 1981 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க அபிவிருத்தி (திருத்த) சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட அளிப்பை 104 ஆம் பிரிவின்கீழ் இரத்துச் செய்வதற்கான பரிந்துரை

வடமத்திய மாகாண சபையின் ஹிங்குரக்கொடை பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர்/பிரதி காணி ஆணையாளர்/மாகாணங்களுக்கிடையே சிரிமெவன் தர்மசேன ஆகிய நான் 1969 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சட்டத்தினாலும் 1981 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க காணி அபிவிருத்தி (திருத்தப்பட்ட) சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் 19 (4) ஆம் பிரிவின் கீழ் அதிஉத்தமராம் சனாதிபதியினால் 1983.01.20 ஆந் திகதி வழங்கப்பட்ட இலக்கம் பொ/ப்ர 3285 அளிப்பின் உரிமையாளரான ஜயந்திபுரவில் வசிக்கும் அந்திரா ஹென்னதிகே பீட்டர் சில்வா என்பவருக்கு வழங்கப்பட்டு .................... மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இல. /2/1/3 இன் கீழ் 1986.01.16 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள அளிப்பின் சட்டரீதியான உரிமையை இரத்துச் செய்கிறேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் .................... ஆம் இலக்க ............................. ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியில் வெளிப்படுத்தப்பட்ட வாய்மொழியாகவோ அல்லது எழுத்து மூலமோ பின்னர் எவ்வித வேண்டுகோளோ அல்லது ஆட்சேபனையோ எவ்வித நபரினாலும் என்னிடம் தெரிவிக்கப்படாமையினால் இக்காணிக்கு சட்டரீதியான உரிமையாளர் இல்லை என திருப்தியுற்று இவ்வளிப்பை காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்து செய்தலை பரிந்துரை செய்கிறேன்.

காணி : அ. ஜ. பி. பொ. 71 காணி இல. 669 ஏக்கர் : 00, றூட் : 03, பேர்ச்சஸ் : 17

எல்லைகள் : வடக்கு : காணித்துண்டு இல. 621 ;
கிழக்கு : காணித்துண்டு இல. 624 ;
தெற்கு : காணித்துண்டு இல. 670 ;
மேற்கு : காணித்துண்டு இல. 673.

சிரிமெவன் தர்மசேன,
பிரதேச செயலாளர்,
ஹிங்குரக்கொடை.

15.10.2012.
11-864

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/30397.
பிரதிக் காணி ஆணையாளரின்
இல. : ඉ/7/දී.බ./තම /377.

### 21 (2) ஆவது அரச காணி ஒழுங்குவிதிகளின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

பொலன்னறுவை மாவட்டம், தமன்கடுவை பிரதேச செயலாளர் கோட்டத்திற்குட்பட்ட 172 ஆம் இலக்க பொலன்னறுவை கிராம சேவை அலுவலர் பிரிவில் பொலன்னறுவை கிராமத்தில் - இலக்க வரைபடத்தில் - இலக்கம் என அறியப்படும் 12 பேர்ச்சுகள் பரப்பளவு கொண்ட காணித்துண்டு வதிவிடத் தேவைக்காக திரு. உபாலி ரத்நாயக்க என்பவரால் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

2. கோரப்பட்டுள்ள காணியின் எல்லைகள் கீழே தரப்பட்டுள்ளன :

வடக்கு : நீரோட்டமுள்ள வடிகால் ;
கிழக்கு : மங்கலிகாவின் காணி ;
தெற்கு : பிரதான தெரு ;
மேற்கு : ஹேமந்த குமாரவின் காணி.

3. கோரப்பட்டுள்ள காணியை தேவையான விடயத்தின் பொருட்டு குத்தகைக்கு விட முடியும் அதனால், அரசு சம்மதிக்கும் பிற நிபந்தனைகளின் கீழ் காணியை குத்தகைக்கு விட விரும்புகின்றது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது ஆண்டுகள் (30) (1995.06.15 முதல்) ;

**ஆண்டுக்கான குத்தகைப் பணம்.**- தலைமை அளவையாளரின் அளவீட்டுக்கு அமைய 1995 ஆம் ஆண்டின்

சந்தைப் பெறுமதியில் 4% ஆகும். இந்த குத்தகைப் பணம் ஒவ்வோர் 05 ஆண்டுக்கு ஒருமுறை திருத்தம் செய்யப்படும். அது முன்னைய 05 ஆண்டின் இறுதியில் அறவிடப்பட்ட தொகையில் 50% க்கு குறையாமல் இருக்க வேண்டும் ;

தண்டப்பணம்.- காணியின் உயர் பெறுமதியில் 4% த்தைப் போல மூன்று மடங்கு தொகை ;

(ஆ) குத்தகை எடுப்போரால் குத்தகை ஆரம்பமான திகதியில் இருந்து ஓர் ஆண்டு காலத்துக்குள் பிரதேச செயலாளரின் மனதைக் கவரும் வண்ணம் இந்த காணி அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் ;

(இ) குத்தகை எடுப்போரால் இந்த காணி வதிவிட நோக்கம் தவிர்ந்த வேறு எந்த செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப் படலாகாது ;

(ஈ) பிரதேச செயலாளர்/ஸ்கோபின் குழு/இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் பல நிறுவனங்களால் விதிக்கப்படும் பல விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உடன்படிக்கை கீழ்படிய வேண்டும் ;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் மிகவும் அபிவிருத்தி செய்யப்பட்ட நிலையில் பேணப்படல் வேண்டும் ;

(ஊ) காணி குத்தகை கொடுக்கப்பட்டுள்ள காலத்தில் குத்தகையாரால் காணி பெற்றுக் கொண்ட காரணத்தை குறித்த காலத்துக்குள் நிறைவேற்றிக் கொள்வதில் அசமந்தப் போக்கு காணப்படுமாயின், குத்தகையை முடிவுறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் ;

(எ) 05 ஆண்டு காலம் முடிவடையும் முன்னர் இரண்டாவது குத்தகை கொடுக்க முடியாது ;

(ஏ) குத்தகைப் பணத்தை தவறாமல் கொடுக்க வேண்டும். குத்தகையில் மழுப்பல் செய்யும் சமயத்தில் உடன்படிக்கை தானாகவே வலுவற்றதாகி விடும்.

இதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் இருந்து 06 கிழமைக்குள் குறிப்பிட்ட காணியை குத்தகைக்கு கொடுக்கக் கூடாது என்பதற்கான ஏற்றுக்கொள்ளத்தக்க காரணிகளை எழுதி என்னிடம் சமரப்பிக்காது விட்டால், கோரிக்கைக்கு ஏற்ப காணி குத்தகைக்கு கொடுக்கப்படும்.

குஷானி பொரலெஸ்ஸ,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2012.

11-962